# வணிகக்கல்வியும் கணக்கீடும்
# வடமாகாணகல்வித் திணைக்கள மாதிரி வினாத்தாள்
# மூன்றாந் தவணைப் பரீட்சை

**தரம் – 10** **பகுதி – 1**

**மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. மிகை உற்பத்திகள் தோன்றியதால் ஏற்பட்ட வியாபாரம்
    1. பண வியாபாரம் 2. இலத்திரனியல் வியாபாரம் 3. பண்டமாற்று வியாபாரம்
    4. மிகை வியாபாரம்
02. தகவல் தொடர்பாடல் தொழில்னுட்ப முன்னேற்றம் காரணமாக முழு உலகம் என்ன நிலைக்கு மாறியுள்ளது.
    1. உலகக்கிராமம் 2. உலகச்சந்தை 3. உலக வணிகம் 4. உலகவியாபாரம்
03. நுகர்வோர் வணிகத்திலிருந்து அடைய எதிர்பார்க்கும் நோக்கம்
    1. தரமான பொருட்களை கூடிய விலையில் பெற்றுக்கொள்ளல்
    2. கவர்ச்சிகரமான பொருட்களாகக் காணப்படல்.
    3. தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளல்.
    4. அன்பளிப்புக்களையும், கழிவுகளையும் பெறல்.
04. வணிகம் காப்புறுதி, வைத்திய வசதிகளை தொழிலாளருக்கு வழங்குவது
    1. இலக்காகக் கருதப்படும் 2. பிரதான நோக்கம் 3. நுகர்வோர் திருப்தி
    4. துணைநோக்கம்
05. இலங்கையின் காட்டுவளம், கனிய வளம் உள்ளடங்கும் உற்பத்திக்காரணி
    1. மூலதனம் 2. நிலம் 3. உழைப்பு 4. முயற்சி
06. வணிகம் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கும் பங்களிப்பாக அமைவது
    1. தீர்மானமெடுத்தல் 2. மூலதனப்பங்களிப்பு 3. மூலப்பொருள் வழங்குதல்
    4. வரிச்சலுகையை வழங்குதல்.
07. வாடிக்கையாளர்கள் உள்ளடங்கும் வணிகச்சூழல்
    1. அகச்சூழல் 2. புறச்சூழல் 3. மக்கட்சூழல் 4. போட்டியாளர்சூழல்
08. சேமிப்புக்கும், முதலீட்டிற்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் சரியான விடை
    1. சேமிப்பு அதிகரிக்க முதலீடும் அதிகரிக்கும் 3. சேமிப்பு அதிகரிக்க முதலீடு மாற்றமடையாது
    2. சேமிப்பு அதிகரிக்கும் முதலீடு குறையும் 4. சேமிப்பு அதிகரிக்க நுகர்வும் அதிகரிக்கும்
09. வணிகத்தின் வாய்ப்பாகக் கருதப்படுவது
    1. புதிய உற்பத்தி முறைகள் 2. புதிய நகரங்களை உருவாக்கல்
    2. போட்டியாளர்கள் உருவாதல் 4. பயிற்சி பெற்ற பணியாளர்

பின்வரும் தகவல்களின் அடிப்படையில் 10 – 13 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| A – பங்குடமை | B - கூட்டிணைக்கப்பட்ட கம்பனி | C – அரசகம்பனி |
| D – அரச திணைக்களம் | E - கூட்டுறவுச் சங்கம் | F - கூட்டுத்தாபனம் |

10. இலாப நோக்கங் கொண்ட தனியார் துறை அமைப்பக்களைக் கொண்ட தொகுதியாக அமைவது
    1. ABE 2. AB 3. AE 4. EF
11. இலாப நோக்கங்களைக் கொண்ட பொதுத்துறை அமைப்பு
    1. C 2. D 3. E 4. F
12. பாராளுமன்ற விஷேட சட்டம் அல்லது பொதுச்சட்டம் மூலம் உருவாக்கப்படுவது
    1. A 2. B 3. E 4. F
13. ஜனநாயக நிர்வாக பண்பைக் கொண்ட அமைப்பு
    1. E 2. A 3. D 4. C
14. விவசாயக் காப்புறுதிச் சபை எந்நிறுவன அமைப்பாக கொள்ளப்படும்.
    1. திணைக்களம் 2. அரசகம்பனி 3. கூட்டுத்தாபனம் 4. தனிவியாபாரம்

தயாரிப்பு – திரு.இ.விக்னராஜ், யா/கைதடி குருசாமி வித்தியாலயம்
தட்டச்சு - திருமதி.சி.சிறிகணேசன்,ICT பாட ஆசிரியர் , யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

15. நிறுவனங்களும் அவை தொடர்பான சட்டங்களுக்கமைய தொடர்புபடுத்தும் போது சரியாக அமையும் ஒழுங்கு யாது

| நிறுவன அமைப்பு | சட்டங்கள் |
|---|---|
| பங்குடமை ( செல்வாக்கு செலுத்துவது) | A- 1972 ம் ஆண்டு 5ம் இலக்கச்சட்டம் |
| கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (பதிவு) | B - 1918 ம் ஆண்டு 6ம் இலக்கச்சட்டம் |
| கூட்டுறவுச்சங்கம் (பதிவு) | B 1890 ம் ஆண்டு 24ம் இலக்க பங்குடமைச்சட்டம |
| தனியுடமை ( பதிவு) | B 2007 ம் ஆண்டு 7ம் இலக்கச்சட்டம |

1.CBAD 2. CDAB 3. DCAB 4. CDBA

16. மின்சாரம், போக்குவரத்து, நீர்வழங்கல் போன்ற அத்தியாவசியச் சேவைகள் வழங்கும் நிறுவன அமைப்பு
1. தனியுரிமை 2. திணைக்களம் 3. கூட்டுத்தாபனம் 4. அரசகம்பனி

17. முகாமைத்துவ கருமங்களில் ஒன்றாக கருதப்படுவது
1. நிர்வாகம் 2. சம்பளம் வழங்கல் 3. மூலதனமிடல் 4. திட்டமிடல்

18. புள்ளிவிபரத் திணைக்களம் ஊழியர் தொகை 25 இற்கும் குறைந்த வணிகத்தை வகைப் படுத்துவது
1. பேரளவு வணிகம் 2. நடுத்தரவு வணிகம் 3. சிற்றளவு வணிகம்
4. சிறிய நடுத்தர அளவிலான வணிகங்கள்

19. ரூ 1000 அல்லது அதற்கு மேற்பட்ட ஆரம்ப மூலதனமாகக் கொண்ட பங்குடமைகள் எழுத்து மூல ஒப்பந்தத்தை கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தும் சட்டம்.
1. 2007 ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டம்
2. 1980 ம் ஆண்டு பங்குடமைச்சட்டம்
3. 1918ம் ஆண்டு வியாபாரப் பெயர்பதிவுக்கட்டளைச்சட்டம்
4. மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்

20. பங்குகளை வெளியிடுவதன் மூலம் மூலதனத்தைத் திரட்டும் நிறுவன அமைப்பு
1. SLT (PLC) Ltd 2. இலங்கை போக்குவரத்துச் சபை
3. இலங்கை மின்சார சபை 4. பத்மா & சிவா நிறுவனம்

21. சரியான கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது
1. உரிமை + பொறுப்புக்கள் = சொத்துக்கள் 2. உரிமை + சொத்துக்கள் = பொறுப்புக்கள்
3. பொறுப்புக்கள் + சொத்துக்கள் = உரிமை 4. உரிமை + சொத்து = பொறுப்பு

**22 – 24 வரையான வியாக்களுக்கு பின்வரும் பெறுமதிகளின் அடிப்படையில் விடைகளைக் காண்க.**

| | | | |
|---|---|---|---|
| தளபாடம் | - 50000 | கடன்கொடுத்தோர் | 40000 |
| மோட்டார் வாகனம் | 100000 | வங்கிக்கடன் | 50000 |
| கடன்பட்டோர் | 30000 | காசுமீதி | 10000 |
| சரக்கிருப்பு | 15000 | நிலுவை தொலைபேசிக்கட்டணம் | 2000 |
| வங்கிமேலதிகப்பற்று | 20000 | பெறவேண்டிய முதலீட்டு வருமானம் | 3000 |

22. நடைமுறையல்லாச் சொத்தின் பெறுமதி ?
1. 208000.00 2. 150000.00 3. 58000.00 4. 112000.00

23. நடைமுறைச் சொத்தின் பெறுமதி ?
1. 208000.00 2. 150000.00 3. 78000.00 4. 58000.00

24. நடைமுறையல்லாப் பொறுப்பின் பெறுமதி
1. 50000.00 2. 92000.00 3. 100000.00 4. 150000.00

25. கணக்கீடு பயனுள்ள தகவல்களை வழங்கும் செயன்முறையாகும். இதன் பிரதான தொழிற்பாடு
1. வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு தீர்மானமெடுக்க உதவுதல்.
2. கணக்கேடுகளில் பதிவு செய்தல்.
3. இரட்டைப் பதிவைப் பூர்த்தி செய்தல்.
4. பரீட்சை மீதியை தயார் செய்தல்.

26. வணிகமொன்றிற்கு வேறு பிரிவினர்களுக்கும் இடையே நடைபெறும் வளங்களின் கைமாற்றம் அழைக்கப்படுவது
1. இடைட்டை விளைவு 2. இரட்டைப்பதிவு 3. வுணிகக்கொடுக்கல் வாங்கல்
4. வளஒதுக்கீடு

27. வணிகக் கொடுக்கல் வாங்கலாக கருதப்படமுடியாத நிகழ்வைக் குறிப்பது

1. ரூபா 50000 க்கு மீள்விற்பனைக்கு பொருள் கொள்வனவு
2. ரூபா 25000 க்கு கடனுக்கு பொருள் விற்பனை
3. முகாமையாளருக்கு ரூபா 15000 மாதாந்தம் கொடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.
4. ரூபா 50000 க்கு குளிர்சாதனப் பெட்டி கொள்வனவு

28. வணிகத்தின் கடந்த காலங்களில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக உருவாகிய வளங்கள் அழைக்கப்படுவது
1.பொறுப்புக்கள் 2. சொத்துக்கள் 3. மூலதனம் 4. வருமானங்கள்

29. வணிகத்தினால் செலுத்தப்பட வேண்டியதும், எதிர்கால கடப்பாடுடையவையாகவும் கருதப்படுவது
1. வருமானங்கள் 2. செலவுகள் 3. சொத்துக்கள் 4. பொறுப்புக்கள்

30. பற்றுக் காரணமாக நிகழும் உரிமையின் குறைவு தவிர்ந்த உரிமையில் இடம்பெறும் ஏனைய குறைவுகள் அழைக்கப்படுவது
1. வருமானங்கள் 2. சொத்துக்கள் 3. செலவினங்கள் 4. பொறுப்புக்கள்

31. சொத்துக்கள் - 15000.00, பொறுப்பு – 100000.00 , உரிமை 50000.00 என்ற கணக்கீட்டுச் சமன்பாடு காணப்படுகின்ற நிலையில் வணிகத்தால் பொறியொன்று ரூபா 50000.00 க்கு கொள்வனவு செய்யப்படுமாயின் புதிய கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது

| | சொத்து | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 150000 | = | 50000 | + | 100000 |
| 2. | 100000 | = | 50000 | + | 50000 |
| 3. | 200000 | = | 100000 | + | 100000 |
| 4. | 150000 | = | 100000 | + | 50000 |

32. வரவு அதிகரிக்கின்றது செலவும் அதிகரிக்கின்றது. இவ் இரட்டை விளைவு பொருந்தும் கணக்கின் வகைகள்
1. சொத்துக்கணக்கு, செலவினக் கணக்கு 2. செலவினக் கணக்கு, வருமானக் கணக்கு
3. உரிமைக்கணக்கு, வருமூனக் கணக்கு 4. சொத்துக்கணக்கு, பொறுப்புக்கணக்கு

| கணக்கு | விளைவு |
|---|---|
| கடன்பட்டோர் | A – அதிகரித்தல் வரவு, அதிகரித்தல் வரவு |
| | B – அதிகரித்தல் செலவு, குறைதல் வரவு |
| வங்கிக்கடன் | C – அதிகரித்தல் வரவு, குறைதல் வரவு |
| | D – குறைதல் வரவு, அதிகரித்தல் செலவு |

33. கடன்பட்டோர், வங்கிக்கடன் கணக்குகளின் விளைவுகள் முறையே சரியாக அமைவது
1. AD 2. BC 3. CA 4. CB

34. கெங்கா கம்பனியிடம் பொறிக்கொள்வனவு மூபா 50000.00. இதனை பதிவு செய்வதற்கான முதன்மை ஏடு
1. கொள்வனவு நாட்குறிப்பு 2. விற்பனை நாளேடு 3. காசேடு 4. பொது நாட்குறிப்பு

35. பட்டியல் விலையிலிருந்து குறைக்கப்படும் பெறுமானமாக அமைவது
1. கொடுத்தகழிவு 2. வியாபாரக்கழிவு 3. பெற்றகழிவு 4. காசுக்கழிவு

36. குறித்தவொரு நிறுவனத்தின் கடன்கொடுத்தோர் தொடர்பான தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| ஆரம்ப கடன்கொடுத்தோர் மீதி | 20000.00 |
| கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு | 15000.00 |
| கடனுக்கு பொருள் கொள்வனவு | 10000.00 |
| கடன்கொடுத்தோரிடம் பெற்றகழிவு | 5000.00 |

இறுதிக் கடன்கொடுத்தோர் மீதி யாது ?
1. 30000.00 2. 10000.00 3. 15000.00 4. 20000.00

37. சில்லறைக் காசேட்டு ஆரம்பமீதி ரூபா 250 குறித்த மாத செலவுகளின் மொத்தம் 2000. குறித்த மாதத்தின் இறுதி சில்லறைக் காசுமீதி 500 எனின் ஆரம்ப மீள்நிரம்பல் தொகை யாது ?
1. 2000.00 2. 2500.00 3. 2250.00 4. 2750.00

38. விற்பனை மூலம் பெற்ற ரூபா 20000 காசோலை அன்றைய தினமே வங்கியில் வைப்பிலிடப் படுமாயின் அரட்டைப் பதிவு
1. வங்கிக் கணக்கு வரவு 20000
விற்பனைக் கணக்கு செலவு 20000
2. காசுக் கணக்கு வரவு 20000
வங்கிக் கணக்கு செலவு 20000
3. வங்கிக் கணக்கு வரவு 20000
காசுக்கணக்கு செலவு 20000
4. விற்பனைக் கணக்கு வரவு 20000
வங்கிக் கணக்கு செலவு 20000

39. கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டு வைப்புச் செய்யப்பட்டு மறுக்கப்பட்ட காசோலைக்கான இரட்டைப் பதிவு

1. வங்கிக் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு
2. வங்கிக் கணக்கு வரவு
மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கு
2. கடன்பட்டோர் கணக்கு வரவு
வங்கிக் கணக்கு செலவு
4. காசுக் கணக்க வரவு
வங்கிக் கணக்கு செலவு

40. காசேட்டின் படி வங்கிமீதி குறைவாகவும் வங்கிக் கூற்றின்படி வங்கி மீதி கூடுதலாகவும் காணப்படின் அவ் வேறுபாட்டுக்குரிய காரணமாக அமைவது
1. வசூலிக்கப்படாத காசோலை 2. நிலையான கட்டளைகள்
3. மாற்றப்படாத காசோலை 4. வுங்கி அறவீடுகள்

41. வங்கிக்கூற்றின் செலவு நிரலில் காணப்படும் உருப்படியாக அமைவது
1. வங்கிக் கட்டணம் 2. நிலையான கட்டளைக் காப்புறுதி
3. காசோலைப் புத்தகக்கட்டணம் 4. பங்கிலாபம்

42. பெற்ற கழிவு ரூபா 500 இற்கான இரட்டைப் பதிவாக அமைவது
1. கடன்பட்டோர் கணக்கு வரவு 500
பெற்றகழிவுக் கணக்கு செலவு 500
2. பெற்றகழிவுக் கணக்கு வரவு 300
கடன்கொடுத்தோர் கணக்கு செலவு 300
3. பெற்றகழிவுக் கணக்கு வரவு 500
காசுக் கணக்கு செலவு 500
4. காசுக் கணக்கு வரவு 500
பெற்றகழிவுக் கணக்கு செலவு 500

43. ராகவன் தனது மின்சாரப் பட்டியல், நீர்ப்பட்டியல், தொலைபேசிப்பட்டியல் என்பவற்றுக்கான கொடுப்பனவுகளை தொலைபேசியூடாக மேற்கொண்டான். இது அழைக்கப்படுவது
1. குறுஞ்செய்தி 2. மின்னஞ்சல் 3. இணையம் 4. Telebanking

44. கணக்கீட்டு மென்பொருள் பொதிகளில் ஒன்றாக கருதப்படுவது
1. Accpack 2. Quick Books 3. MYOB 4. மேற்கூறிய யாவும்

45. பரீட்சை மீதியின் வரவு நிரலில் காணப்படும் கணக்குகளின் தொகுதியாக அமைவது
1. மின்சாரக் கணக்கு, தளபாடக் கணக்கு,வங்கிக் கடன் வட்டிக் கணக்கு
2. தொலைபேசி கட்டணக் கணக்கு, வங்கிக் கடன் கணக்கு, மூலதனக் கணக்கு
3. முதலீட்டுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு, சம்பளக் கணக்கு
4. கொள்வனவுக் கணக்கு, விற்பனைக் கணக்கு, கொடுத்தகழிவுக் கணக்கு

46. பரீட்சை மீதியின் செலவு நிரலின் கூட்டுத்தொகை வரவு நிரலின் கூட்டுத் தொகையை விட கூடுதலாக காணப்பட்டது எனில்
1. தொங்கல் கணக்கு மீதி செலவில் ஏற்படும் 2. தொங்கல் கணக்கில் வரவில் ஏற்படும்
3. தொங்கல் மீதி காணப்படாது
4. தொங்கல் வரவு, செலவு மீதிகளைக் கொண்டதாகக் காணப்படும்

**47 -48 வரையான வினாக்களுக்கு பின்வரும் கூற்றை கருத்தில் கொண்டு விடையளிக்குக.**
**கொடுத்தகழிவு ரூபா 1000 கடன்பட்டோர் கணக்கில் பதியப்படவில்லை.**

47. இவ்வழுவைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு யாது ?
1. கொடுத்தகழிவு கணக்க வரவு 1000
கடன்பட்டோர் கணக்கு செலவு 1000
2. கடன்பட்டோர் கணக்கு வரவு 1000
கொடுத்தகழிவு கணக்க செலவு 1000
3. கொடுத்தகழிவு கணக்கு வரவு 1000
தொங்கல் கணக்கு செலவு 1000
4. தொங்கல் கணக்கு வரவு 2000
கொடுத்தகழிவு கணக்கு செலவு 2000

48. இவ்வழுவால் பரீட்சை மீதியில் தொங்கல் கணக்கு உருவானது
1. வரவு நிரலில் 2. செலவு நிரலில் 3. இருநிரலிலும் 4. உருவாகாது

49. சவர்க்காரம் ஒன்றின் பண்டக்குறிப் பெயராக அமைவது
1. Signal 2. Sun 3. Hero 4. Komba

50. பிரித்தானியாவின் நாணய அலகையும் அதன் தற்போதைய இலங்கை நாணயத்திற்கு எதிரான நாணய மாற்றுவீதத்தையும் ( அண்ணளவாக) முறையே குறிப்பது
1. யூரோ, 174/= 2. யென் 0.0300
2. ஸ்ரேலிங் பவுண்ஸ் 202/= 4. டொலர் 130/=

# வணிகக்கல்வியும் கணக்கீடும்
# மூன்றாந் தவணைப் பரீட்சை
# மாதிரி வினாத்தாள்

**தரம் – 10** **பகுதி – 11**

**முதலாம் வினாவுட்பட பகுதி 1 இல் இருந்து இரண்டு வினாக்களையும், பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி i – x வரையான வினாக்களுக்கு விடை தருக.

க.பொ.த (உயர்தர) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத ஜெரோம் தனது வணிகபாட அறிவைப் பயன்படுத்தி தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்தான். தனது சேமிப்பு பணமான ரூபா 100000 ஐப் பயன்படுத்தி அலங்காரப் பொருட்களை செய்து விற்பதற்காக **“சுபம் அலங்காரப் பொருட்கள் விற்பனை”** நிலையத்தை 01.01.2015 இல் ஆரம்பித்தான். 05.01.2015 இல் வணிகத்தை விரிவுபடுத்த வங்கியில் ரூபா 50000 கடனை 10% வட்டியில் பெற்றுக் கொண்டான். பொருட்களுக்கான கேள்வி அதிகரித்ததால் ஊழியர்கள் இருவரை தலா 10000.00 மாதச் சம்பளத்தில் நியமித்த்ான். பொருட்களைச் சந்தைப்படுத்த சிறிய மோட்டார் வாகனத்தை டேவிட் பீரிஸ் கம்பனியிடம் ரூபா 200000 இற்கு கடன் கொள்வனவு செய்திருந்தார். அலங்கார பொருட்களை செய்வதற்காக ரூபா 65000 இற்கு உடன் காசிற்கு கொள்வனவு செய்திருந்தார்.

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும் இடம் பெற்றன.

| | | |
|---|---|---|
| 1. | தொலைபேசிக்கட்டணம் | 3000 |
| 2. | வங்கியில் வைப்பு | 75000 |
| 3. | விற்பனைகள் | 50000 |
| 4. | மின்சாரக் கட்டணம் | 5000 |
| 5. | பெற்றதரகு | 1000 |
| 6. | சமரக்கொடியிடம் | 25000 |
| 7. | சமரக்கொடிக்கு வழங்கிய காசோலை | 20000 |
| 8. | 31.1.2015 இல் காசு மீதி | 150000 |

i. ஜெரோம் ஆரம்பித்த வணிகம் உரிமை அடிப்படையில் எவ்வணிக அமைப்பு ஆகும் ?

ii. அ. ஜெரோமின் வணிகம் பதிவு செய்யப்பட வேண்டுமா ? காரணம் தருக ?
ஆ. பதிவு செய்வதானிய் எச் சட்டத்தின் பதிவு செய்ய வேண்டும் ?

iii. அ. ஜெரோமின் வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்த வேணடிய புறச்கூழல் காரணிகள் 2 தருக ?
ஆ. மேலே நீர் குறிப்பிடப்பட்ட 2 காரணிகளும் செல்வாக்கு செலுத்தும் விதத்தினைக் குறிப்பிடுக?

iv. ஜெரோம் எதிர்காலத்தில் இவ்வணிகத்தை வேறு எச் சட்ட ஆளுமையற்ற நிறுவனமாக மாற்றலாம்?

v. ஜெரோமின் நிறுவனம் முகாமைத்துவ நடைமுறையின் அடிப்படையில் தொழிற்பட அவர் ஆற்ற வேண்டிய முகாமைத்துவ கருமங்கள் 4 தருக ?

vi. 05.01.2015 இல் நிறுவன கணக்கீட்டுச் சமன்பாட்டைக் குறிப்பிடுக?

vii. சமரக்கொடியிடம் கொள்வனவுக்காக இரட்டைப் பதிவினைத் தருக ?

viii. இங்கு பயன்படுத்தப்பட்ட மூல ஏடுகளையும் அதற்கரிய மூல ஆவணங்களையும் முறையே குறிப்பிடுக?

ix. இற்கு கடன்கொள்வனவுகள் தவிர ஏனைய கொள்வனவுகள் அனைத்தும் காசுக்கு இடம் பெற்றது. ஏனின் கொள்வனவிவன் பெறுமதி யாது ?

x. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையல்லா சொத்தொன்றினையும் நடைமுறையல்லா பொறுப்பு ஒன்றினையும் குறிப்பிடுக ?

## பகுதி 1

### இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

02. i. தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான வேறுபாடு முறையே 2 தருக ?

ii. அ. வணிகத்தின் பொதுவான நோக்கங்கள் 2 தருக ?

ஆ. துணை நோக்கங்கள் 2 தருக ?

iii. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரியெனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

1. உற்பத்திக் காரணிகளில் மூலதனமும் ஒன்றாகும்.
2. நாட்டின் பொருளாதார விருத்திக்கு தேவையான கொள்கைகளை வகுப்பது நிதி நிறுவனங்களாகும்.
3. வரவு செலவுத் திட்ட கொள்கைகள் அரசியல் சூழலுக்குள் உள்ளடங்கும்.
4. வினைத்திறன் கொண்ட இயந்திரங்களை பெற்றுக் கொள்ளல் தொழில்நுட்பச் சூழலுக்குள் உள்ளடங்கும்.
5. பொருளாதார சூழல் காரணிகள் 4 தருக ?
6. நிறவனம் ஒன்றின் பலம், பலவீனம், சந்தர்ப்பம், சவால் முறையே ஒவ்வொன்று தருக?

03. i. நிறுவன அமைப்புக்களை நோக்க அடிப்படையில் வகைப்படுத்துக ?

ii. பங்குடமை தொழிலில் ஈடுபடுகின்ற வாண்மைத் தொழில்கள் 4 தருக ?

iii. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

1. தனியுடமை, பங்குடமை என்பன சட்டஆளுமையுடைய அமைப்புக்களாகும்.
2. கூட்டிணைக்கப்பட்ட பொதுக்கம்பனிகள் பங்குகளை வழங்கி மூலதனத்தைத் திரட்டலாம்.
3. 1972 ம் ஆண்டு 5ம் இலக்கச் சட்டத்தின்படி கூட்டுத்தாபனத்தை பதிவு செய்யலாம்.
4. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் விசேட சட்ட மூலம் திணைக்களங்கள் உருவாக்கப்படும்.

iv. அரச திணைக்களத்தின் முக்கிய பண்புகள் 4 தருக ?

v. சிற்றளவு வணிகத்திற்கும் பேரளவு வணிகத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் 2 தருக ?

04. i. தனியுரிமை வணிகத்தைப் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்க வேண்டிய 2 படிவங்களைக் குறிப்பிடுக ?

ii. வணிகம் ஒன்றைப் பதிவு செய்வதனால் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் 4 தருக ?

iii. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

1. தனிவியாபாரம் ஆரம்பித்து 14 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்.
2. இலங்கை மின்சார சபை ஒரு கூட்டுத்தாபனம் ஆகும்.
3. உரிமையாளர் முகாமையாளராகக் கருதப்படுவர்.
4. முகாமைத்துவ கருமங்களுள் மூலதனமிடல். திட்டமிடல், ஒழுங்கமைத்தல் என்பன காணப்படும்.

iv. கூட்டுறவுச் சங்கத்தின் பண்புகள் 4 தருக ?

v. பின்வருவனவற்றுடன் தொடர்புடைய சட்டங்களைக் குறிப்பிடுக.

அ. பங்குடமை மீது செல்வாக்குச் செலுத்தும் சட்டம்.

ஆ.. பங்குடமையை பதிவு செய்வதற்கான சட்டம்.

இ. பங்குடமையின் உந்நப்பங்காளரை வரையறுக்கும் சட்டம்

ஈ. ரூபா 1000 அல்லது அதற்கு மேல் ஆரம்ப மூலதனத்தைக் கொண்ட பங்குடமையின் எழுத்துமூல ஒப்பநதத்தை வலியுறுத்தும் சட்டம்.

## பகுதி 11

### இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

05. i. அழகப்பா வணிகத்தில் ஜனவரி மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களினால் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்பட்ட தாக்கம் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

**சொத்துக்கள் = உரிமை + பொறுப்பு**

| தளபாடம் + | சரக்கிருப்பு + | கடன்படுனர் + | +காசு = உரிமை + | வங்கிக்கடன்+ | கடன்கொடுனர் |
|---|---|---|---|---|---|
| + 15000 | | | + 50000 = + 65000 | | |
| | -5000 | | + 7000 = + 2000 | | |
| | - 7000 | +10000 | = + 3000 | | |
| | | | - 50000 = - 5000 | - 45000 | |
| + 15000 | | | | | + 15000 |

**ii.** இரட்டைப் பதிவுத் தத்துவத்திற்கமைய கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்குகளின் பெறுமானங்களில் அதிகரித்தல் அல்லது குறைதல் வரவுப் பக்கத்திலா செலவுப் பக்கத்திலா பதிவு செய்யப்படும் என்பதை குறிப்பிடுக?

| கணக்கின் பெயர் | அதிகரித்தல் | குறைதல் |
|---|---|---|
| தளபாடக் கணக்கு | | |
| மூலதனக் கணக்கு | | |
| வங்கிக் கடன் கணக்கு | | |
| மின்சாரக் கணக்கு | | |
| பெற்றவாடகை | | |

**06. அ.** காமராஜா் நிறுவனத்தின் 2015.10.01 திகதியில் மீதிகள் வருமாறு

கடன்பட்டோர் மீதிகள் -

| | |
|---|---|
| சர்மா | 30000 |
| மகேன் | 25000 |

கடன்கொடுத்தோர் மீதிகள்

| | |
|---|---|
| சினேகன் | 27500 |
| சொக்கன் | 31000 |
| காசுமீதி | 50000 |
| வங்கிமீதி | 60000 |

அக்டோபர் மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

2015.10.05 சர்மாவிடம் பெற்ற காசு 19000, கொடுத்த கழிவு 1000.

2015.10.08 மகேனிடம் 10000 காசோலை பெறப்பட்டு உடனடியாக வங்கியில் வைப்பச் செய்யப்பட்டது. அனுமதித்த கழிவு 500.

2015.10.19 சினேகனிடம் 500 கழிவு பெற்று கடன் தீராக்கப்பட்டது.

2015.10.23 10% கழிவு பெற்று சொக்கனின் 11000 கடன் தீர்க்கப்பட்டது.

வேண்டப்படுவது - 1. கழிவு நிரல்களுடன் கூடிய காசுக்கணக்கு

2. கழிவு நிரல்களுடன் கூடிய வங்கிக்கணக்கு

ஆ. பின்வரும் வங்கி மூலமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வங்கிக் கூற்றைத் தயார் செய்க.

| | |
|---|---|
| 2015.07.01 | வங்கியில் காணப்பட்ட மீதி 20000. |
| 2015.07.05 | வணிகத்தினால் வைப்புச் செய்யப்பட்ட காசு 90000. |
| 2015.07.07 | வணிகத்தினால் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு வசூலான காசோலை 5000. |
| 2015.07.10 | நிலையான கட்டளை ( காப்புறுதிக் கொடுப்பனவு) 4000. |
| 2015.07.15 | வணிகத்தினால் வழங்கப்பட்டு மாற்றப்பட்ட காரோசலை 6000. |
| 2015.07.19 | கடன்பட்டோரான மகிலனின் நேரடி வைப்பு 3000. |
| 2015.07.24 | வங்கி வணிகத்தின் சார்பில் வசூலித்த பங்கிலாபம் 2000. |
| 2015.07.27 | வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் 1000. |
| 2015.07.28 | வணிகத்தின் தேவைக்கு வங்கியில் இருந்து எடுத்த காசு 5000. |
| 2015.07.30 | காசோலை மூலம் செலுத்திய மின்கட்டணம் 1500. |

07. தேவசூரியா நிறுவனத்தின் 31.12.2014 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 520000 |
| காப்புறுதி | 5000 | |
| விற்பனைகள் | | 300000 |
| கொள்வனவுகள் | 200000 | |
| தளபாடம் | 205000 | |
| மோட்டார் வாகனம் | 255000 | |
| கடன்பட்டோர் | 45000 | |
| கடன்கொடுத்தோர் | | 35000 |
| வங்கிக்கடன் | | 90000 |
| சம்பளக்கணக்கு | 12000 | |
| வங்கிக்கணக்கு | 130000 | |
| வங்கிக்கடன் வட்டி | 1000 | |
| காசுக்கணக்கு | 75000 | |
| தொங்கல் கணக்கு | 17000 | |
| | 945000 | 945000 |

இப் பரீட்சை மீதியை தயார் செய்து தொங்கல் கணக்கினூடாக தற்காலிகமாக சமப்படுத்திக் கொள்ளப்பட்ட பின்னர் பின்வரும் வழுக்கள் ஏடுகளில் நிகழ்ந்திருப்பது கண்டுகொள்ளப்பட்டது.

1. காசு விற்பனை அம்சமான ரூபா 20000 ஏடுகளில் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை
2. கடன் கொள்வனவுகள் ரூபா 10000 கடன்கொடுத்தோர் கணக்கில் பதியப்பட வில்லை.
3. வினைத்திறனை அதிகரிக்க பொறி ஒன்றுக்கு புதிய பாகம் பொருத்திய செலவு ரூபா 20000 பொறி திருத்தச் செலவுக் கணக்கில் பதியப்பட்டது.
4. கடன்கொடுத்தோருக்கு கொடுத்த 22000 காசுக் கணக்கில் மட்டும் பதியப் பட்டிருந்தது.
5. காப்புறுதியாக செலுத்திய 5000 காப்புறுதிக் கணக்கில் பதியப்படவில்லை.
6. பெற்ற கழிவுக்கணக்கிலும் கொடுத்த கழிவுக் கணக்கிலும் 100 கூடுதலாகக் காணப்பட்டது.

வேண்டப்படுவது :

1. வழுக்களைத் திருத்துவதற்கான பொது நாட்குறிப்பேடு
2. தொங்கல் கணக்கு
3. வழுக்களைத் திருத்திய பின்னர் பரீட்சை மீதி